உ
சிவமயம்



கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும்
இணுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர் திருமதி.சற்குணலீலாவதி இராசரத்தினம்

அவர்களின் பிரிவு குறித்த

# நினைவு மலர்

25-08-2021

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

அமரர், திருமதி

# சற்குணலீலாவதி இராசரத்தினம்



தோற்றம்

30-11-1945



மறைவு

26-07-2021



## "திதி வெண்பா"

**ஆண்டு பிலவ அதில்வளர் ஆடிமாதம்**
**பூண்டதிதி அபரபக்கத் திருதியை - நீண்டபுகழ்**
**இராசரத் தினம்சற்குண லீலாவதி புவிநீத்து**
**அராவணிந்தோ னடிசேர்ந்த நாள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர்கள் இராசரத்தினம் சற்குணலீலாவதி தம்பதிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

## விநாயகர் துதி



திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டும் - செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர் தம்கை

# பஞ்சபுராணம்

## தேவாரம்

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதி சூடிக்
காடுடைய சுடலைப் பொடிபூசியென்னுள்ளங் கவர்கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாட் பணிந்தேத்த அருள்செய்த
பீடுடைய பிரமாபுர மேவிய பெம்மான் இவனன்றே.

(சம்பந்தர்)

கூற்றாயின வாறு விலக்ககிலீர்
  கொடுமைபல செய்தன நானறியேன்
ஏற்றாயடிக் கேயிர வும்பகலும்
  பிரியாது வணங்குவ னெப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே
  குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேனடி யேனதி கைக்கெடில
  வீரட்டா னத்துறை யம்மானே.

(அப்பர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பித்தாப்பிறை சூடிப்பெரு மானேயருளாளா
எத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்
நல்லூரருட்டறையுள்
அத்தா வுனக்காளாயினி யல்லே னெனலாமே.
(சுந்தரர்)

## திருவாசகம்

பால்நினைந்தூட்டும் தாயினும் சாலப்
பரிந்து நீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்தமாய்
தேனினைச் சொரிந்து புறம் புறம் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்தருளுவ தினியே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியை
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கை
செற்றவர் புரங்கள் செற்ற எம் சிவனை
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக்கண்டு கண்டுள்ளம்
குளிர என்கண் குளிர்ந்தனவே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவாருலகில்
ஊரும் உலகும் கழறஉழறி
உமைமணவாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள
அளப்பெருங் கரணங்கள் நான்கும்
சிந்தையேயாகக் குணமொரு மூன்றும்
திருந்து சாத்து விகமே யாக
இந்துவாள் சடையான் ஆடும் ஆனந்த
எல்லையின் தனிப் பெருங்கூத்தின்
வந்த பேரின்ப வெள்ளத்துட் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்.

## திருப்புகழ்

இறவாமற் பிறவாமற் எனையாழ்சற் - குருவாகிப்
பிறவாகித் திறமான பெருவாழ்வைத் - தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற் - குமரேசா
அறநாளைப் புணர்வோனே அவிநாசிப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் சற்குணலீலாவதி இராசரத்தினம் அவர்களின் வாழ்க்கைச் சுவடுகள்

திருமூலரால் "சிவபூமி" எனச் சிறப்பிக்கப்பட்ட ஈழத்திருநாட்டின் வடபால் யாழ்ப்பாண நன்னகரிலிருந்து வடக்கே சுமார் ஐந்து கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்திருப்பது கோண்டாவில் எனும் அழகிய விவசாயக் கிராமம். இங்கே சைவமும் தமிழும் சேர்ந்திலங்கும் நெட்டிலிப்பாய் பதியில் பிள்ளையாரின் அருளாட்சி பெற்று அடியவர் களாக விளங்கிய சங்கரப்பிள்ளை பொன்னுச்சாமி - யோகம்மா தம்பதியரின் இல்லற வாழ்வில் மூத்த மகளாக 30.11.1945இல் பிறந்தவர்தான் அமரர் சற்குணலீலாவதி அவர்கள். அருமைத்தம்பி மகேஸ்வரன் (ஓய்வுநிலைப் பிரதி அதிபர், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி) தங்கைமார் சரோஜினிதேவி, இலட்சுமிதேவி, சந்திராதேவி, சகுந்தலாதேவி, ஜெமிலாதேவி ஆகியோருடன் சப்தசுரங்களாகத் திகழ்ந்த சகோதரங்கள். பெற்றோரின் பண்பாட்டு நெறி பிசகாது கல்வியையும் தொழில் தேர்ச்சியையும் உரிய அளவில் பெற்றுச் சிறந்தனர்.

அமரரின் இளமைக் காலக் கல்வியானது கோண்டாவில் சைவத்தமிழ்க்கலவன் பாடசாலையில் (தற்போதைய இந்துக்கல்லூரி) எட்டாம் வகுப்பு வரை நீடித்தது. அதன் பின்னர் வீட்டோடு இருந்து சகோதரங்களைப் பேணி வளர்த்ததுடன் சமையல் முதலான குடும்பக் கடமைகளையும் நிறைவேற்றி வந்தார். தந்தையாரின் விவசாய நடவடிக்கைகளுக்கு உதவியாகத் தாயாரும் அதிக வேளைகளில் சென்று விடுவதால் மூத்தவராகிய சற்குணலீலாவதியே குடும்ப நிர்வாகத்தைப் பேண வேண்டியிருந்தது. ஒரேயொரு தம்பி மேல் கரிசனை காட்டிப் பாசத்தைப் பொழிந்ததுடன் தங்கைமார் மீதும் அன்பு காட்டி, அரவணைத்து "மூத்தவள் நீ கொடுத்தாய் வாழ்வினில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னேற்றம்" எனத் தக்கதாய் வாழ்ந்து காட்டினார். இன்முகங் காட்டி, எவரையும் அன்பால் ஈர்த்துக்கொள்ளும் பக்குவம் சிறுவயதிலிருந்தே அவரிடம் குடிகொண்டிருந்தது.

உரிய பருவம் வந்ததும் நாவற்குழியில் வசித்து வந்த தந்தையாரின் தமக்கையார் தங்கம்மா அவரது கணவர் தம்பிஐயா ஆகியோரின் இரண்டாவது மகனான இராசரத்தினம் என்பவரை 1966ஆம் ஆண்டு இவருக்குத் திருமணம் செய்து வைத்தனர் பெற்றோர். இராசரத்தினம் இளவயதிலேயே வியாபார நடவடிக்கை களில் ஈடுபாடு காட்டி வந்தவர். திருமணத்தின் பின்னர் இராசரத்தினம் சற்குணலீலாவதி தம்பதியர் இணுவில் தெற்கில் வசித்தனர். விநாயகா ஸ்ரோர்ஸ் எனும் கடையை அமரரின் கணவர் நடத்தி வந்தார். "சின்னராசா கடை" என அது ஊரவர்களால் அழைக்கப்பட்டது.

குறையில்லாத இல்லற வாழ்வு. மூன்று பெண்களையும் இரண்டு ஆண்களையும் பிள்ளைச் செல்வங்களாகத் தந்து பெருமைப் படுத்தியது. பிள்ளைகளை இயன்றவரை கல்வியிலும் பண்பாட்டிலும் சிறந்தோங்கச் செய்து அவர்கள் வளர்ந்ததும் அவர்களுக்கான திருமணஞ் செய்யும் கடமைகளையும் தம்பதியர் நிறைவேற்றினர்.

மூத்த மகள் தமிழ்ச்செல்விக்கு நீர்வேலி வாசியான விக்னேஸ்வரன் (வர்த்தகர்) என்பவரைத் திருமணஞ் செய்து வைத்ததுடன் தமது பாரம்பரிய இல்லமான கோண்டாவிலில் வாழச் செய்தனர். இரண்டாவது மகள் அன்பரசிக்கு சொந்த மைத்துனரான நாவற்குழியைச் சேர்ந்த உதயணன் என்பவரை மணமுடித்து வைத்தனர். மூன்றாவது மகள் தயாநிதி (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் - சண்டிலிப்பாய் பிரதேச செயலகம்) ஈவினையை சேர்ந்தவரும் யாழ்ப்பாணம் மாநகர சபை உத்தியோகத்தருமான பத்மகுமார் என்பவரை மணஞ்செய்து கொண்டார். மூத்தமகன் இராஜசேகரன் நாவற்குழியைச் சேர்ந்த உறவினரான கார்த்திகாவை மணஞ் செய்ததுடன் இளைய மகன் திருக்குமரன் சங்கரத்தையைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்த தர்சிகாவை மணமுடித்துக்கொண்டார். ஆண் மக்கள் இருவரும் தத்தம் குடும்பத்தவருடன் கனடா நாட்டில் வாழ்கின்றனர். பிள்ளைகளுக்கான கடமைகளை நிறைவேற்றிய பூரிப்பில் அமரரும் கணவரும் நிறைவு கண்டனர். தற்போது தமது ஐந்து பிள்ளைகள் வழிகளில் 11 பேரப்பிள்ளைகளைக் கண்டு மகிழ்ந்ததுடன் ஒரு பூட்டப்பிள்ளையையும் கண்ட பேரின்பம் அமரருக்குரியது.

சற்குணலீலாவதி அம்மையார் தமது உறவுகளை எப்போதும் பேணி வந்தவர். தமது பிள்ளைகளைப் போலவே சகோதரங்களின் பிள்ளைகளிடமும் பாசமும் அக்கறையும் காட்டியவர். கணவரின் உறவுகள் மதிக்கும் வகையில் எல்லோரிடமும் நயமாக நடந்து நல்ல பேர் எடுத்தவர். ஊரவர்களுடன் உறவாடிக் களிப்பதில் வல்லவர். நல்லவர். அமரருடன் பேசுவதில் பலரும் ஆனந்தம் காணுவார்கள். எவரையும் புண்படுத்தாத நல்மனம் அவருடையது. எந்தக் குறையும் இல்லாத இல்லறத் தலைவி அவர். இருப்பினும் இறைவனின் திருவிளையாடலை நாம் அறிவோமா? 2000ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் கணவர் இராசரத்தினம் அவர்கள் காலமானார். 34 ஆண்டு கால தாம்பத்தியம் முடிவு கண்டபோது அன்னையார் கலங்கிப் போனார். என்ன செய்ய முடியும்? நெட்டிலிப்பாய் பிள்ளையாரையும் இணுவில் பரராஜசேகரப் பிள்ளையாரையும் கந்தசுவாமியாரையும் வேண்டி உருகினார். பிள்ளைகளால் கிடைத்த ஆதரவால் மனம் தேறினார்.

2006 - 2009 வரையுள்ள மூன்று ஆண்டுகள் கனடா சென்று பிள்ளைகள், மருமக்கள், பேரச்செல்வங்களுடன் இனிதே காலம் களித்தார். தவறவிட்ட ஆட்டுக்குட்டியைத் தேடித்திரியும் இடையனைப் போலத் தாய்மண்ணின் நினைவு வருத்தவே "நான் எனது மண்ணில் சென்று சாக விரும்புகின்றேன்" எனக்கூறி ஊருக்குத் திரும்பிவிட்டார். முள்ளந்தண்டு வடப்பாதிப்பால் நடமாட முடியாத நிலையும் ஏற்பட்டு விட்டது. சுமார் 5 ஆண்டுகள் சக்கர நாற்காலி வாழ்க்கை என்றானது. கோண்டாவிலிலுள்ள மூத்த மகளில்லத்திலும் இணுவில் தெற்கிலுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய மகள் இல்லத்திலுமாக மாறி மாறிக் காலத்தைக் கழித்தார். மகள்மாருடன் மருமகன்மாரும் அவருக்குரிய தேவைகளை அன்புடன் நிறைவேற்றி வைத்தனர். வெளிநாட்டுப் பிள்ளைகளும் மருமக்கள், பேரப்பிள்ளைகளும் அடிக்கடி தொலைபேசியில் கதைத்து மகிழ் வித்தனர்.

இருப்பினும் காலம் வலியதல்லவா? அதன் கணக்கும் வலியது தான். இருதய சுவாசப் பிரச்சினை காரணமாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு 26-07-2021 திங்கட்கிழமை மாலை 6.30 மணியளவில் எல்லோருடனும் அன்புமொழி பேசிய தாயாரின் பூவுலக வாழ்வு முடிவு கண்டது. அவரது உயிர் பரம் பொருளுடன் இரண்டறக் கலந்துவிட்டது. 76 வயதில் அபர பக்க திருதியையன்று காலமானார்.

வெளிநாட்டிலிருந்து மூன்று பிள்ளைகளும் வந்துவிடத் துடித்த போதும் நாட்டின் அசாதாரண நிலைமைகளினால் மூத்தமகன் இராஜசேகரன் மட்டும் சிரமப்பட்டு வந்து தாயாரின் இறுதிச்சடங்கினை நிறைவேற்றி வைத்தார். 30.07.2021 இல் அமரரின் இறுதிச் சடங்குகள் நடைபெற்று தாவடி இந்து மயானத்தில் பூதவுடல் அக்கினியுடன் சங்கமமாகியது.

"நெருநல் உளனொருவன் இன்றில்லையென்னும்
பெருமை உடைத்திவ் வுலகு"

என்பது திருக்குறள்.

தாய்மைக்கேயுரிய பூரணப்பொலிவும் பண்பும் நிறைந்த எமது அன்னையின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறையருளை இறைஞ்சுவோமாக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமை விட்டு எங்கு சென்றீரோ...?

பெற்றோர், சகோதரர், கணவன், பிள்ளைகளுடன் உங்களுடைய கடமை முடிந்துவிட்டது என்று எண்ணிப் பேரப் பிள்ளைகளான எங்களைப் பாதியில் விட்டுச் சென்றீரோ? தங்களுடைய ஆசியும் அரவணைப்பும் இனி எமக்கு யாரிடம் இருந்து கிடைக்கும்? தாங்கள் எமைவிட்டு நிரந்தரமாகச் சென்று விட்டீர்கள் என்பதை இன்றுவரை எமது மனம் ஏற்றுக்கொள்ள மறுக்கின்றது.

இனிவரும் காலங்களில் தங்கள் இடத்தில் இருந்து எமக்கு அறிவுரை புகட்டவும் அன்புடனும் அரவணைப்புடனும் பார்க்கவும் எமக்கு யார் இங்கு உள்ளார்? நீங்கள் எம்முடன் எமது வீட்டில் இருந்த ஒன்பது வருடமும் நாம் அம்மாவின் குரலை விடவும் உங்களுடைய குரலைத்தான் அதிகம் கேட்டு இருக்கிறோம். பாடசாலை சென்று வரும் காலங்களில் கூட காலை தேநீரில் தொடங்கி இரவு உணவு வரை நாம் நேரத்திற்கு உண்கிறோமோ என்று எமைப் பற்றியே சிந்தித்துக்கொண்டு இருப்பீர்கள். நாம் அசதியில் தூங்கிவிட்டால் கூட அம்மாவிடம் சென்று நாம் உணவு உண்டோமா என்று விசாரிப்பீர்கள். பாடசாலை செல்லும்போதும், வகுப்புகளிற்குச் செல்லும்போதும் வெய்யில் கூட தனது பேரப் பிள்ளைகளைச் சுட்டுவிடக்கூடாது என்பதற்காக தொப்பி, குடை கொண்டு போனமோ என்று யோசித்துக்கொண்டே இருப்பீர்கள். இனியும் எம்மேல் யார் அவ்வாறு அக்கறை காட்டுவார்?

தாங்கள் எமைவிட்டு இணுவில் சென்று பின்பும் கூடத் தினமும் தொலைபேசியில் நாங்கள் என்ன செய்கிறோம், உணவு நேரத்திற்கு உண்கிறோமா? வகுப்பிற்குச் செல்கிறோமா? என்று தினமும் கேட்பீர்கள். ஹர்ஜின் பிறந்த பின்பும் தினமும் தொலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசியில் ஹர்ஜின் பற்றிக் கேட்கும்போது எம்மைப்பற்றி விசாரிக்க மறப்பதில்லை. இறுதியாக நாங்கள் உங்களைப் பார்க்கும்போது கூட ஹர்ஜினை அன்பாக அணைத்து முத்தமிட்டுக்கொண்டீரே. தங்கள் வலியை மறைத்துத் தங்கள் பூட்டப்பிள்ளைக்கு எதுவும் ஆகக்கூடாது என்பதற்காக ஹர்ஜினை இனி அழைத்து வர வேண்டாம் என்று கூறினீரே. இது போன்ற அன்பு எமது ஹர்ஜினுக்குக் கூட இனி எவர் மூலமாகக் கிடைக்கும். அவன் வளர்ந்து வரும் வேளையில் எனது பாட்டி எங்கே எனக்கேட்டால் நாம் இனி என்ன செய்வோம். எம்மை இங்கு தனியே அழ வைத்து விட்டு தாங்கள் மட்டும் தனிமையில் எங்கு சென்றீரோ? தம் பிரிவால் இங்கு துயருற்று வாடும் எமது அம்மாவிற்கு எம்மால் என்ன ஆறுதல் வார்த்தை கூறிட முடியும்? தாம் எங்கு இருந்தாலும் என்றும் உங்கள் ஆசி எமக்கும் எமது குடும்பத்திற்கும் என்றும் கிடைத்திட வேண்டும் என்று அந்த இறைவனை வேண்டிக் கொள்கிறோம்.

**பேரப்பிள்ளைகள்**
**கோபிகா, தர்மிகா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருமகள் இரங்கல்

"அகத்தின் அழகு முகத்தில் தெரியும்". அதே போல் எங்கள் மாமியின் உள்ளமும், அவர் மற்றவர்களுடன் அன்பாகவும் கண்ணியமாகவும் பழகும் தன்மையும் அவர் முகத்தில் தெரியும். அவர் எனக்கு இன்னொரு அம்மா மாதிரித்தான். எப்பொழுதும் என்னுடன் கதைப்பார். பழகுவார். நாங்கள் கனடாவில் இருந்து T.P எடுக்காவிட்டால் நிமிடத்துக்கு நிமிடம் Call பண்ணுவார். எப்படி இருக்கிறீர்கள் என்று கேட்பார். நான் அவரின் கோபமான முகத்தைப் பார்க்கவில்லை. எப்பவும் சிரித்த முகத்துடன் தான் என்னுடன் கதைப்பார். தன் பிள்ளைகளில் ஒருவராக என்னையும் ஏற்றுக்கொண்டவர். தர்சிகா என்று என் பெயரைச் சொல்லும்போது அவரின் உண்மையான அன்பை நான் உணர்ந்துகொள்வேன். என் ஆரோக்கியத்தில் என் அம்மா மாதிரி அதிக அக்கறை காட்டுவார். தருண், கவின் என்று ஆசையாகப் பேரப்பிள்ளைகளைக் கூப்பிடுவார். இனி நாங்கள் எப்ப மாமியின் குரலைக் கேட்கப் போகிறோம். அவரின் அழகான சிரித்த முகமும் வழிகாட்டல்களும் எங்கள் மனதில் என்றும் இருக்கும். மாமி உங்கள் ஆத்மா சாந்தி யடைய சங்கரத்தை வட்டுக்கோட்டை பிடியம்பதி பத்திரகாளி அம்மனை வேண்டுகின்றேன்.

**மருமகள் தர்சிகா**
**(கனடா)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாசமிகு அண்ணியே!

எம்மை அன்னை போல் ஆதரித்து, மைத்துனியாய் உறவு கொண்டு அண்ணியாய் எமக்குக் கிடைத்த தெய்வ மகளே! என் மாமன் மகளே! உங்கள் மரணச் செய்தியால் நாம் எல்லோரும் அதிர்ச்சியடைந்தோம். திடீர் மரணமாகையால் கவலை மிகக் கொண்டோம்.

தங்கச்சி! உங்கள் வீடு தேடி வரும் போதெல்லாம் அண்ணருக்கேற்ற நற்குணவதியாய் எம்மை ஆதரித்து, எமது குழந்தைகளையும் தின் பண்டங்கள், விளையாட்டுச்சாமான்கள் கொடுத்து மகிழ்விப்பீர்கள். வீடு திரும்பும்போதும் வெறுங் கையோடு அனுப்ப மாட்டீர்கள். எம் அண்ணரும் நோய்வாய்ப்பட்டு இருக்கும்போது அவரையும் மிகுந்த கவனத்துடன் பார்த்து வந்தீர்கள். அவர் மறைந்து 20 வருடங்கள் ஓடிவிட்டன. பாசம், கடமை மிகுந்த பிள்ளைகளை அண்ணர் உங்களுடன் விட்டுச் சென்றார். அவர்கள் உங்களுக்கு ஒரு குறையும் விடாமல் பார்த்து வந்தார்கள். கனடாவைக் காட்டி அனுப்பினார்கள். பெரியண்ணா, அண்ணி, சின்னண்ணா, அண்ணி இருவரும் எம்மை விட்டுப் பிரிந்தனர். நான் மட்டும் தனிமையில். உங்கள் பிள்ளைகள் பேரப் பிள்ளைகள், பூட்டன் ஆகியோரைப் பார்த்த பெருமையுடன் இறைவனடி சென்றீர்கள். எம் மனதிலும் என்றென்றும் நீங்காது இருப்பீர்கள்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**கிளி மச்சாள், பிள்ளைகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனி என்று நாம் காண்போம்!

இனி என்றுதான் உங்களைக் காண்போம். அம்மம்மா, நீங்கள் எங்களை விட்டு பிரிவீர்கள் என்று கொஞ்சம் கூட எதிர்பார்க்கவில்லை. ஏன் நீங்கள் தவிக்கவிட்டு சென்றீர்கள். நான் காணும் இடமெல்லாம் உங்கள் நினைவாக உள்ளது.

அம்மம்மா எங்கள் அன்புடன் அரவணைத்து பாதுகாத்து வந்தீர்கள். அம்மம்மா எங்களை கவனமா பார்ப்பா என்ற நம்பிக்கையுடன் அம்மா வேலைக்கு செல்வார். நாங்களும் அம்மம்மா இருக்கிறா என்ற துணிவுடன் இருப்போம். எந்த நேரமும் எங்களை கவனித்த படியே தீபிகா, யஸ்மினி என்று கூப்பிட்ட படி இருப்பீர்கள். குளியுங்கோ, சாப்பிடுங்கோ, படியுங்கோ, home work இருந்தா செய்யுங்கோ எம்முடைய வகுப்பு நேரங்களை முன்னரே கேட்டறிந்து அதற்கு முன்னே எங்களை தயார்படுத்துவீர்கள்

இப்போது எமக்கு கிடைத்த கொரோனா லீவு உங்களுடன் கூடுதல் நேரத்தை செலவிட செய்தது. எப்போதும் எங்கட உடல் நலன் குறித்தே சிந்திப்பீர்கள். 10மணி என்றதும் Tea போட்டு தருவீர்கள். சோறு ஊட்டி விடுவீர்கள். சாப்பிடாவிட்டால் உடனே உருத்தும்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமபோஷா தயாரித்து தருவீர்கள். நேரானா நேரம் சத்தாக சாப்பிட்டு ஆரோக்கியமாக இருக்கவேணும் என்பீர்கள். சாப்பாட்டை விட சிற்றுண்டியே எமக்கு பிடிக்கும் என்பதால் சிற்றுண்டி வகைகளை வாங்கி வைத்து தருவீர்கள்

அம்மம்மா சொல்வீர்கள் முன்னர் பேரப்பிள்ளைகள் பள்ளிக்கூடம் செல்வதால் பகல்பொழுது போகாது. அன்றோ, மாமாக்களுடன் கதைப்பதும் அவர்கள் அனுப்பும் படங்களை திரும்ப திரும்ப பார்ப்பதாகவும் தான் பொழுது போகும் எனக் கூறுவீர்கள். இப்ப தீபிகன், யஸ்மினி வீட்டில் நிற்பதால் அவர்களுடனே பொழுது போகுது என்பீர்கள். அம்மா அப்பா வேலையிலிருந்து வரும்வரை எங்களை கவனமாக பார்த்து அவர்கள் வந்த பின்பே சற்று ஓய்வெடுப்பீர்கள்

அம்மம்மா கதை சொல்லுங்கோ என்று கேட்டால் அந்தகால கதைகள், அம்மப்பா பற்றி கதைகள், அம்மம்மா கடா சென்று வந்த கதையை பல கதைகள் கேட்டு தெரிந்து கொள்வோம் அம்மப்பாவும் இருந்திருந்தால் எவ்வளவு நல்லாய் இருக்கும் என்று எண்ணிக் கொண்டிருக்கும் நாம் இன்று அம்மம்மாவையும் தொலைத்து விட்ட பாவிகளானோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலையில் அம்மா வேலைக்கு செல்லும் நேரம் அம்மம்மா சுறுசுறுப்பாகி விடுவீர்கள். வீட்டு வேலைகள் செய்து முடிக்க நேரமாகிவிடுவதால் அம்மா சாப்பிடாமல் சென்றாலும் என்று சாப்பிட பண்ணுவீர்கள். Tea போட்டு கொடுத்து இதையாவது குடிச்சிட்டுப்போ என்று சொல்வீர்கள். சாப்பாடு போட்டு bagஇல் வைத்து தண்ணீர் போத்தல் எல்லாம் வைச்சாச்சா! என எங்களையும் உதவிக்கு அழைத்து அம்மா சென்ற பின் தான் ஓய்வெடுப்பீர்கள். இத்தனையும் அம்மம்மா Wheel chair இல் இருந்து பலதும் சுழன்று கொண்டு செய்வதை பார்த்து வியந்திருக்கிறோம்

அம்மம்மா முன்பு உங்களுக்கு கடுமையான வருத்தம் வந்த போது நான் பயந்து விட்டேன், உங்களை பிரியப்போகிறேனோ! என்று. அதிலிருந்து மீண்டு நீங்கள் இனி ஒன்றும் நடவாது என சொல்லி இருந்தீர்கள். என்றாலும் நான் உங்களை பகல் நேரங்களில் நித்திரை கொள்ளும் போது கண் முழிக்காமல் அம்மம்மா சாமிக்கிட்ட போயிடுவாவோ! என்று பயந்து எழுப்பி கண்ணைத்திறவுங்கோ, கதை சொல்லுங்கோ என்று சொல்லி நித்திரை கொள்ள விடமாட்டேன். ஆனால் இப்போ ஒருவரும் எதிர்பாரா வகையில் சாமியிடம் சென்று விட்டீர்கள் உங்கள் ஆத்மா சாந்தியடைய இணுவில் பரராசசேகர பிள்ளையாரை வேண்டுகிறேன்

என்றும் உங்கள்
நினைவுடன்
- யஸ்மினி -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் அக்கா!

நீங்கள் உதித்த கருவறையில் நாங்களும் உதித்தது நாங்கள் செய்த தவமா? கடவுள் தந்த வரமா? பத்து மாதம் சுமக்காத தாய் ஆகவும் அன்பான அரவணைப்பால் தந்தையாகவும் சகோதர பாசத்தில் மூழ்க வைத்து சந்தோசத்தில் திளைக்க வைத்த உற்சாக உறவு நீங்கள் அக்கா. அளவில்லாத அன்பை அள்ளித் தந்து எமை விட்டுப் பிரிந்து சென்று விட்டீர்கள். பெற்றோருக்கு ஈடாகப் பிரியமுடன் இருந்து உற்ற காலத்தில் உதவிகள் பல புரிந்த காலங்கள் எம் மனதில் அழியாது.

**தங்கை சகுந்தலா**

---

## இனி என்றுதான் காண்போம்

என்று தான் காண்போம் அக்கா இனி நாங்கள் உங்களை. அன்று கண்ட உரு அருட்சோதி ஆனதே. இனி ஒரு கணம் தன்னும் காண மாட்டோமா. சிரித்த முகம். கலகலப்பான பேச்சு; இனிக் காண்பதெப்போ? வாடிய முகத்தினராய் பிள்ளைகளும் வருந்தி நிற்க நோய் ஒன்று உங்களை நொடியினிற் கொண்டு சென்றதுமேன்? இனிய பேச்சும் உங்களின் உண்மை அன்பும் இனி எம் வாழ்வில் மறக்க முடியாத நினைவலைகள். உங்கள் பிள்ளைகள் கதிகலங்கி நிற்கின்றார்களே! பாசமிகு பெரியக்கா பாரினிலே மணி விளக்காய் பேரொளியைப் பரப்பிய நீர் பேரமைதி கொண்டீரோ! என் பிள்ளை கள் பெரியம்மாவை இனி எப்போ காண்போம் என்று கேட்கிறார்கள். அக்கா உங்களுக்குப் பிறப்பென்று ஒன்று இருந்தால் மீண்டும் எம் மத்தியில் வந்துவிடுவீர்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய விநாயகப் பெருமானை வேண்டுகிறேன்.

**தங்கை ஜெமிலா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது அருமை அத்தையே...
# மருமகள் தீபா புலம்பல்

எங்களை மீளாத்துயரில் ஆழ்த்திவிட்டு எங்குதான் சென்றீர்கள். என்னையும் உங்கள் பிள்ளைகளைப் போலவே நடத்தினீர்கள். எப்பொழுதும் இனிமையாகவே பேசுவீர்கள். நல்ல கணவரை எனக்குத் தந்தீர்கள். எங்கள் பிள்ளைகளுக்கு நல்ல அப்பம்மாவாக இருந்து அன்பைப் பொழிந்தீர்கள். எங்கள் எல்லோரையும் நல்ல முறையில் வழிநடத்தினீர்கள். எங்கள் எல்லோரது நலனிலும் எப்பொழுதும் அக்கறையாக இருப்பீர்கள். நீங்கள் அத்தையாகக் கிடைத்தது எனது பாக்கியம்.

ஆசை மாமாவை நாங்கள் பல வருடங்களுக்கு முன் இழந்து விட்டோம். அவர் இல்லாதது எமக்கெல்லாம் பெரும் கவலைதான். ஆனாலும் அவர் இல்லாத குறையில்லாமல் நீங்கள் பார்த்துக்கொண்டீர்கள். நீங்கள் இறப்பதற்கு முதல் நாளும் எங்கள் எல்லோரிடமும் போனில் நன்றாகக் கதைத்தீர்கள். இவ்வளவு சீக்கிரம் நீங்கள் எங்களை விட்டுப் பிரிவீர்கள் என்று நாங்கள் எண்ணவேயில்லை. உங்கள் பிரிவு எங்களுக்குப் பெரும் அதிர்ச்சியாகவும் வேதனையாகவும் இருக்கிறது. உங்களைக் கடைசி நேரத்தில் பார்க்க முடியவில்லையே எனக் கவலையாக உள்ளது.

நீங்கள் எங்களையெல்லாம் விட்டுப் பிரிந்து சென்றாலும் எம்முடன் என்றும் கூடவே இருப்பீர்கள் தெய்வமாக.

**உங்கள் அன்பு மருமகள்**
**தீபா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறக்க முடியுமா?

பெரியம்மா என்றதும் உங்கள் அழகிய அந்த சிரிப்புத்தான் எம் கண் முன்னே வந்து நிற்கும். நாங்கள் சிறுவயதாக இருக்கும் போதிலிருந்து இன்று வரை பெரியம்மா வீட்டுக்குப் போகிறோம் என்றால் எங்கள் எல்லோருக்கும் அலாதிப் பிரியம். பள்ளிக்கூடத் திற்கு விடுமுறை விட்டால் முதலில் நினைவுக்கு வருவது பெரியம்மா வீடுதான்.

சித்திமார்களோடு நாங்கள் நடையாக உங்கள் வீட்டுக்கு மகிழ்ச்சியோடு வருவோம். நீங்களும் எங்களை அன்பாக வரவேற்று, உங்கள் பிள்ளைகள் போல் எங்களையும் பாசத்தோடு பார்த்து நிற்பீர்கள். உங்கள் அன்பான கவனிப்பால், எங்களுக்கு வீடு திரும்பவே மனம் இருக்காது. நாங்கள் உங்கள் வீட்டில் இருக்கும்போது, எங்களுக்குப் போட்டுக்கொள்வதற்குச் சட்டையும் நீங்களே தருவீர்கள். நாங்கள் எங்கள் வீட்டுக்குத் திரும்புகிறோம் என்றால், நீங்கள் அழகாய் மடித்து வைத்திருக்கும் உங்கள் பிள்ளைகளின் சட்டைகளை எங்களுக்காய்த் தருவீர்கள். அது மட்டுமல்லாது பெரியப்பா எங்களை சும்மா அனுப்பி வைப்பாரா? இல்லை. அவரும் எங்களுக்கு தின்பண்டங்கள் ஏதாவது தந்துதான் வழியனுப்பி வைப்பார். இன்னும் எத்தனை எத்தனை உதவிகள். நீங்கள் இருவரும் சேர்ந்து எமக்குச் செய்தீர்கள். அவற்றை யெல்லாம் மறக்க முடியுமா? தைப்பொங்கல், வருடப்பிறப்பு, தீபாவளி என்று எந்த பண்டிகை வந்தாலும், நீங்களே தேடி வந்து எங்களுக்கு உங்கள் அன்புப் பரிசைக் கொடுப்பீர்கள். நீங்கள் முக மலர்ச்சியோடு கொடுக்கும் அந்த உதவி, எங்களை அந்த வருடம் முழுவதும் மகிழ்ச்சியாக வைத்திருக்கும்.

இன்னும் சொல்வதென்றால், நீங்களும் பெரியப்பாவும் எங்களுக்கு ஒரு வழிகாட்டியாகவே எப்போதும் இருந்துள்ளீர்கள். உங்களைப் பார்த்துத்தான் நாங்களும் வீட்டை எப்படிச் சுத்தமாக, அழகாக வைத்திருப்பது மற்றும் எந்த உடைகளையும் அழகாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மடித்து வைத்துக்கொள்ள வேண்டும் என்பதையும் பழகிக் கொண்டோம். நீங்கள் இருவரும் யார் வீட்டுக்கு வந்தாலும் அன்பாக வரவேற்பதும் உபசரிப்பதும் பின்பு வீட்டுக்குச் செல்லும் போது "நீங்கள் வீட்டுக்கு வந்தது மிக்க சந்தோஷம்" என்று சொல்வதும் உங்களிடம் இருந்துதான் கற்றுக்கொண்டோம். மற்றும் சகோதரர்கள் ஒற்றுமையாக ஒருவரையொருவர் புரிந்து கொண்டு எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பதையும் எவரிடமும் எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் பழகுவதும் எப்போதும் எங்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாகவே இருந்துள்ளது.

அத்துடன் நாங்கள் வெளிநாட்டிலிருந்து அங்கு வருகிறோம் என்றால் நாங்கள் வருவதற்கு முன்னரே நீங்கள் அங்கு எங்ளுக்காகக் காத்திருப்பீர்கள். பின்பு வழியனுப்புவதற்கும் முன்னரே வந்து, எங்களுடன் அளவளாவி அன்புடனும் பாசத் துடனும் வழியனுப்பி வைப்பீர்கள். ஆனால் இனி எங்களுக்காகக் காத்திருக்கவோ வழியனுப்பவோ அங்கு எங்கள் பெரியம்மா இல்லை. எங்களுடன் கலகலப்பாகப் பேசவோ செல்லமாகக் கண்டிக்கவோ நீங்கள் இன்று எம்மிடையில் இல்லை என்று எண்ணும்போது நெஞ்சமெல்லாம் கனக்கிறது. உங்களோடு நிறையக் கதைக்க வேண்டும் போல் மனம் ஏங்குகிறது. ஆனால் நீங்கள் எங்களுக்குச் சொல்லாமலே சென்றுவிட்டீர்கள். எங்கள் பிள்ளைகள் கூட உங்கள் பேச்சைக் கேட்க ஆவலாக உள்ளார்கள். நாங்கள் எவரும் எதிர்பார்க்கவில்லை. யாரும் எதிர்பாரா வேளையில் எம்மை எல்லாம் விட்டுப் பிரிந்துவிட்டீர்கள். ஆனால் நாங்கள் உங்களை மறந்துவிடுவோம் என்று மட்டும் எண்ணாதீர் கள். உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம். என்றும் உங்கள் நினைவுடன்,

**பெறாமக்கள்**

**வசீகரன் (கனடா)**

**வனிதா, கவிதா, கஜாகரன் (லண்டன்)**

**வாகீசன் (இலங்கை)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## என் பாசமிகு அம்மம்மா

அம்மம்மா நீங்கள் எங்கு சென்றுவிட்டீர்கள். உங்களை காணாது நான் தவிக்கின்றேன். எந்நேரமும் உங்கள் முகம் தான் என் கண்ணிற்குள் திறகிறது. நீங்கள் நான் பாடசாலை செல்லும் போது தொப்பி எடுத்து கவனமாக செல்ல வேண்டும் என்று கூறி பத்திரமாக அனுப்புவீர்கள். அம்மா, அப்பா அலுவலகத்திற்கு சென்ற பிறகு நீங்கள் தான் எங்களை பாதுகாத்து கொள்வீர்கள், எங்களுக்கு பரீட்சை வருகிறது என்றால் நீங்கள் தான் படி என்று கூறி விட்டு நாங்கள் படித்துக் கொண்டு இருக்கிறமா என்று அவதானிப்பீர்கள். நாங்கள் ஆரம்பக்கல்வி கற்கும் வேளைகளில் எங்கள் பெரியம்மா வீட்டில் இருந்தீர்கள், நாங்கள் பாடசாலை முடிந்து அங்கு வந்ததும் எங்களுக்கு உணவூட்டி முடித்த பின்னர் சொல்வதெழுதல் வைப்பீர்கள் அந்த வேளை இப்பவும் என் உள்ளத்தில் நிற்கிறது நான் குழப்படி செய்யும் போது அப்பா எனக்கு அடிக்க வரும் போது நீங்கள் தான் முன் வந்து "அவன் இனி அந்த தவறு செய்யமாட்டான்" என்று கூறி அவர்களை தடுப்பீர்கள். நீங்கள் எங்களோடு இருந்த காலங்களில் எங்களுக்கு புத்திமதி கூறி எங்களை திருத்துவீர்கள். எமது குழந்தை பருவத்தில் உங்களுக்கு இயலாத நிலையிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியம்மாவுடன் எங்களை கவனிப்பீர்கள். பின்னர் எமது
வீட்டில் வந்த பிறகு நீங்கள் இருக்கிறீர்கள் என்று நாங்கள்
துணிவுடன் இருப்போம். நீங்கள் எங்கு சென்றுவிட்டீர்கள்
உங்கள் பேரப்பிள்ளைகளை விட்டு? உங்கள் பிரிவால்
நாம் வாடுகிறோம். நாங்கள் தொலைக்காட்சி பார்க்கிற
பொழுது எந்நேரமும் அதனுடன் இருக்காமல் படியுங்கோ
என்று அன்புடன் கண்டிப்பீர்கள்; எனது பரீட்சை காலத்தில்
பாடப்புத்தகத்தை உங்களை வாசிக்க சொல்லி நான் அதை கிரகித்து
கொள்வேன். கல்வியில் நாம் அடையும் சிறு சிறு வெற்றிங்க
-ளை பலருடனும் பகிர்ந்து மகிழ்ச்சி அடைவீர்கள். இறுதி
பயணத்திற்கு முதல் நாள் உங்கள் அறைக்குள் வந்தபோது
என்ன தீபிகன் எப்படி இருக்கிறேன் என கேட்டீர்கள். நான்
அம்மம்மா வடிவாக உள்ளீர்கள் என்று சொன்னேன். நீங்கள்
ச்சா... என கூறி சிரித்தீர்கள் அது தான் நீங்கள் என்னுடன்
கதைத்த இறுதி நாள், ஆனால் நீங்கள் என்னை
விட்டு நீண்ட தூரம் செல்லப்போகிறீர்கள் என்று தெரிய
-வில்லை. உங்கள் நினைவால் வாடும்

- பேரன் தீபிகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் அந்தப் புன்னகையைக் காண்பேனோ?

அன்பு மாமி! நீங்கள் பூலோகம் விட்டு சுவர்க்கலோகம் சென்றுவிட்டீர்கள் என்ற சேதியைக் கேட்டபோது என்னால் நம்ப முடியவில்லை. உங்களுடன் இறுதி நேரத்தில் கதைக்க முடியவில்லை என்பதை எண்ணி என் நெஞ்சம் கனக்கிறது.

வஞ்சம் இல்லா உள்ளம். எல்லோரையும் புன்முறுவலோடும் அன்போடும் வரவேற்று உபசரிக்கும் பண்பு, மாமி உங்களுக்கு நிகர் நீங்கள் தான்.

உங்களை எப்போது பார்த்தாலும் எனக்கு குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில் குமிண் சிரிப்பும் பனித்த சடையும் பால்போல் வெண்ணீறும் என்ற தேவாரம் தான் நினைவுக்கு வரும்.

நீங்கள் எல்லோரிடமும் காட்டும் பாசமும் கரிசனையும் அன்னையிடம் பெறுவதற்கு நிகரானது.

நீங்கள் எங்கள் அப்பாவை "டேய் தம்பி" என்று அழைப்பதைப் பார்த்து பலமுறை ரசித்திருக்கிறேன். பழங் கதைகள் பேசி இளமைப்பருவ நினைவுகளை மீட்டி எல்லாம் இப்ப போல் இருக்கிறது என்று சொல்லி மகிழ்ந்த அந்த பசுமையான தருணங்களை மீட்டிப் பார்க்கிறேன்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான் உறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

என்பதற்கு அமைய மாமி எனும் உன்னத ஜீவன் இறைவனடி சேர்ந்திருப்பீர்கள்.

**கலங்கிய விழிகளோடு**
**சஞ்சயன்**
**(மருமகன்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Dear Ammamma,

You were one special lady and your sudden passing is felt deeply by many, even though you lived a full and happy life. You deeply loved your children, grandchildren, and great grandchild as we also loved you dearly. You were the type of person to eagerly socialize with anyone and everyone, and left everyone with a smile on their face and every one is truly grateful for it. I am honored to be your first grandson, and greatful for all the experiences that I have had with you! When you came to Canada, we all were so happy, especially my mother. You were a great help for my mother and father when Vithun was born, and I was very happy that you were there to take care of him and my mother. Not only were you there for them, you were especially there for me. When ever my parents were busy at work, you were there to take care of me, keep me company, and made sure I was always happy. When you left back to Sri Lanka, we were all sad but we understood. Since then we have tried our best to come see you and I'm grateful for the opportunity that I had a few years ago. I definitely regret not communicating with you as much as I could have.You truly were a special woman! You may have passed on, but your memories would always live on within us. Thank you for your sacrifices, your care, your love and everything that you have done for me. I know you are in a much better place. I will be forever grateful and thankful that I could call you my grandmother.

**Rest in peace Grandma,**

**Naveen**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பம்மா is the best Grandma in the World.......

அப்பம்மா is the best Grandma in the World because she cares a lot about her loved ones. We still cannot believe that அப்பம்மா is not with us anymore. We hope her soul Rest in peace.
We have lots of memories to share about அப்பம்மா. அப்பம்மா is a very kind, wise, respectful, caring, gentle, and an overall amazing human being. அப்பம்மா calls us almost every other day, talking to us about our daily life and advicing us about our health, education, and behavior. We always follow whatever she says. We're the luckiest grandkids in the World to have a wonderful grandma and we're even more blessed to be able to visit her several times since we were born. Whenever அப்பம்மா sees us, she forgets about her health condition and expresses a bright face. அப்பம்மா shares stories with us about அப்பப்பா, who passed away before we were born, as well as our dad's childhood. We're glad to have the chance to celebrate a Mother's day with அப்பம்மா, the last time with her. We cut a cake for அப்பம்மா which made her very happy. The last time we talked with அப்பம்மா (the day before she passed away) she saw all of our faces, talked to each of us, and expressed brightly while being really sick. We didn't have the chance to say goodbye in person but we're relieved that our dad had the chance to pay his last respect to the best அப்பம்மா in the World.

We Miss You அப்பம்மா

- Abinan, Anjana, and Aswin
அபினான், அஞ்சனா,
அஸ்வின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் பாசமிகு பெரியம்மா

அன்பான அரவணைப்பும் பாசமான கதையும் மிகுந்த எங்கள் பெரியம்மா எங்கு சென்றுவிட்டீர்கள் பெரியம்மா என்று சொல்ல நமக்கு வேறு யார் உண்டு. நீங்கள் எங்களுடன் சந்தோச மாக இருந்த அழகான நாட்களை விட்டுச் சென்றுவிட்டீர்கள். உங்கள் அன்பு எப்போதும் எங்களுக்கு வழிகாட்டியாக இருக்கும். நாங்கள் உங்களைப் பார்க்க முடியவில்லை என்றாலும் நீங்கள் எங்கள் பக்கத்தில் இருக்கின்றீர்கள். உங்கள் சிரித்த முகமும் எங்கள் மனதில் என்றும் ஆழமாக இருக்கும். உங்களைப் போல் அன்பு செலுத்த இவ்வுலகில் யாருமே இல்லை. உங்கள் பிள்ளை களைப் போல் எங்களையும் சமமாகப் பார்த்தீர்கள். நீங்கள் எங்கள் எல்லோரையும் தவிக்க விட்டு எங்கு சென்றீர்கள் பெரியம்மா.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**என்றும் பாசமுடன்**
**ரசிக்கா, கஜன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது அருமை அண்ணி...

நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்தது மிகவும் கவலையாக இருக்கிறது. நீங்கள் சுகமில்லாமல் இருப்பதறிந்து இறப்பதற்கு இரண்டு நாட்களுக்கு முன் போனில் கதைத்தேன். அப்பொழுது உங்களால் பெரிதாகக் கதைக்க முடியவில்லை. என்னால் ஏலாமல் இருக்கிறது என்று மாத்திரம் சொன்னீர்கள். உங்களிடம் கதைக்க முடியவில்லையே எனக் கவலையாக இருந்தது.

அண்ணி! உங்களைப் போல் அண்ணி கிடைத்தது எமது பெரும் பாக்கியம். எங்கள் அண்ணருடன் சேர்ந்து எங்கள் இன்ப துன்பங்களிலெல்லாம் பங்கு கொண்டீர்கள். எனது பிள்ளைகளும் ஆசை மாமா அத்தை வருகிறார்கள். அவர்களிடம் போகப் போகிறோம் என்றால் மிகவும் சந்தோசப்படுவார்கள். அப்படி யொரு வரவேற்பும் அன்பும் ஆதரவும். உங்களை நினைக்கும் போதெல்லாம் அழுகைதான் வருகிறது.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

**உங்கள்**

**ராசு**

## தேற்றம்

**மண்ணிற் பிறந்தோர் மரண மெய்துதல்**
**எண்ணில் மாறாத வுண்மையாம் – கண்ணில்**
**நீர்வார அழுதென்? நினைந்து உருகியென்?**
**ஆர்திருவா ரந்த வுயிர்?**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குமரகுருபர சுவாமிகள் அருளிய
# சகலகலாவல்லி மாலை

வெண்டா மரைக்கன்றி நின்பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாது கொலோ
சகம் ஏழும் அளித்து
உண்டான் உறங்க ஒளித்தான் பித்
தாகவுண் டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே!
சகல கலாவல்லியே! - 01

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்வாய்
பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்று மைப்பாற்
காடுஞ் சுமக்கும் கரும்பே
சகல கலாவல்லியே! - 02

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்த்துன் அருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோவுளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக் கண்டு
களிக்கும் கலாப மயிலே
சகல கலாவல்லியே! - 03



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கும் பனுவற் துறைதோய்ந்த
கல்வியும் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்வாய்
வட நூற்கடலும்
தேக்கும் செழுந்தமிழ்ச் செல்வமும்
தொண்டர்செந் நாவினின்று
காக்கும் கருணைக் கடலே!
சகல கலாவல்லியே! - 04

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்னே
நெடுந் தாட் கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன்செந்
நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலாவல்லியே! - 05

பண்ணும் பரதமும் கல்வியும்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலும்
கனலும் வெங்காலுமன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே! - 06

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்
காயுளங் கொண்டுதொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா
லமுதம் தெளிக்கும் வண்ணங்
காட்டும் வெள்ளோதிமப் பேடே!
சகல கலாவல்லியே! - 07


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்விற் பனமு மவதான
முங்கவி சொல்லவல்ல
நல்வித்தையுந் தந்தடிமை கொள்வாய்
நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால
முஞ்சிதை யாமை நல்குங்
கல்விப் பெருஞ் செல்வப்பேறே!
சகல கலாவல்லியே.! - 08

சொற்கும் பொருட்கு முயிரா மெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்?
நிலந்தோய் புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத் தாளே!
சகல கலாவல்லியே! - 09

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண்டளவிற் பணியச்செய்
வாய்படைப் போன் முதலாம்
விண்கண்ட தெய்வம் பல்கோடியுண்
டேனும் விளம்பினுன்போற்
கண்கண்ட தெய்வமுளதோ?
சகல கலாவல்லியே! - 10

## சரஸ்வதி அந்தாதி காப்பு

ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய வுணர்விக்கு மென்னம்மை - தூய
உருப்பளிங்கு போல்வாளென் னுள்ளத்தி னுள்ளே
இருப்பளிங்கு வாரா திடர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கணவர், பிள்ளைகளுடன்



பெற்றோர், சகோதரர்களுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இளைய மகனின் திருமண நிகழ்வில் குடும்பத்துடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பேரப்பிள்ளைகளுடன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





பூட்டப்பிள்ளையுடன்



அன்னையர் தினம் 2021

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



63ஆவது பிறந்ததின நிகழ்வில்
(கனடா)



70ஆவது பிறந்ததின நிகழ்வில்



75 ஆவது பிறந்ததின நிகழ்வில் (30.11.2020)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கண்ணீர் அஞ்சலி
அமரர்
சற்குணலீலாவதி இராசரத்தினம்
கருணையைப் போற்றும் கண்ணியமே
பேதங்கள் ஏதுமின்றி பகுப்புகள் யாதுமின்றி
உள்ளத்து சுடர்களின் ஊக்குவிப்பே
அன்பாலே அரவணைத்து
அறிவாலே ஆக்கம் தந்த மாசற்ற மணி விளக்கே
உங்களது ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !
பேராமக்கள், பேரப்பிள்ளைகள்.





கண்ணீர் அஞ்சலி
தோற்றம்
30
11
1945
மறைவு
26
07
2021
திருமதி சற்குணலீலாவதி இராசரத்தினம்




கண்ணீர் அஞ்சலி
தோற்றம்
30
11
1945
மறைவு
26
07
2021
அமரர்
திருமதி. சற்குணலீலாவதி இராசரத்தினம்
எமது நூலகத்தின் முன்னாள் செயலாளர் திருக்குமரன் மற்றும் உறுப்பினர் ராஜன்
அவர்களின் அன்புத்தாயார் ஆவார்.
அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவிப்பதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல
பரராஜசேகரனை வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!
30.07.2021
இணுவில் பொது நூலகம் சனசமூக நிலையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விருட்சம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"*

# நன்றி நவில்கின்றோம்

எமது குடும்ப விளக்கு இறைபதம் அடைந்த செய்தி அறிந்து ஓடோடி வந்து ஆறுதல் கூறி அரவணைத்து உறுதுணையாய் நின்று உதவிகள் பல புரிந்து எமது துன்பத்தில் பங்குபற்றியோர், தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தோர், கண்ணீர் அஞ்சலிகள், துண்டுப் பிரசுரம், மலர் வளையம் வைத்து அஞ்சலித்தோர், இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தியோர் மற்றும் இன்றைய வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளில் கலந்து கொண்டு ஆத்ம சாந்திப் பிரார்த்தனைகளில் ஈடுபட்ட அனைத்து உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றி யினைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.



**பிள்ளைகள், மருமக்கள்,**
**சகோதரர்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கோண்டாவில் நெட்டிலிப்பாய் பிள்ளையார் கோவில்

Kajananth, Inuvil.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org